Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR
S.C.No.384/2025

Dated 09-04-2026

Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவீன் | வயது | : | 24 |
| தந்தை பெயர் | : | பாண்டியன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பாரதிதாசன் தெரு | தொழில் | : | டைல்ஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

**Ld. D. Counsel Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன். அ.சா.1,2,3,4 ஆகியோர்களை தெரியும். இறந்துபோன சசிக்குமாரை எனக்கு தெரியும்.

2) 9.9.2025 ம் தேதி நான் கலைஞர் நகர் 2 ம் தெருவிற்கு வேலை செய்துவிட்டு சம்பள காசு வாங்குவதற்காக சுமார் காலை 11 - 11.30 மணிக்குள் சென்றேன். அப்போது கலைஞர் நகர் 2 ம் தெருவில் குறுக்கு ரோட்டில் சென்றபோது அப்போது அருவாளுடன் 5 பேர் ஓடினார்கள். அவர்கள் சட்டை முழுவதும் ரத்தத்துடன் ஓடினார்கள். அப்போது கலைஞர் நகர் 1வது

தெருவில் ஒரே சத்தமாக இருந்தது. அப்போது நான் போய் பார்த்தேன்.அப்போது சூர்யா இறந்துபோன சசிக்குமார் அம்மாவிடம் சூர்யா வந்து சக்தி, ராஜா, கோகுல், சஞ்சய் இவர்கள்தான் சசிக்குமாரை வெட்டிவிட்டு ஓடியதாக சொன்னான்.

3) அப்போதுதான் நான் தெரிந்துகொண்டேன். சசியை வெட்டிவிட்டு ஓடிய நபர்கள் இவர்கள்தான் என்று நான் தெரிந்துகொண்டேன்.

4) அந்த நான்கு நபர்களை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரிகளில் வரிசையில் 2 வதாக நிற்பவர்தான் சக்தி ஆவார். ( சாட்சி தற்போது 2 வதாக நிற்பவர் பெயர் சஞ்சய் என்று கூறுகிறார்.) வரிசையில் 3 வதாக நிற்பவர்தான் பிரபா ஆவார். வரிசையில் 3 வதாக நிற்பவர்தான் பிரபா ஆவார். (நீதிமன்றம் 3 வதாக நிற்பவரிடம் என்ன பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் பிரபாகரன் என்று கூறுகிறார். ) ஆஜர் எதிரிகளில் வரிசையில் 4 வதாக நிற்பவர்தான் சக்தி ஆவார். ( நீதிமன்றம் 4 வதாக நிற்பவரிடம் என்ன பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் ஹரிஹரன் என்று கூறுகிறார். ) ஆனால் அவர் பெயர் சக்தி என்கிற ஹரிஹரன் என்று கூறுவார்கள். ஆஜர் எதிரிகளில் வரிசையில் 5 வதாக நிற்பவர்தான் கோகுர் ஆவார். (நீதிமன்றம் 4 வதாக நிற்பவரிடம் என்ன பெயர் என்று கேட்டதற்கு அவர் தன்னுடைய பெயர் கோகுல் என்று கூறுகிறார். )

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

12 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்ய இருப்பதாக

தெரிவிக்கப்பட்டது.  அதனால் மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பிறகு 12 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது)

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.09 19:11:08 +0530